# தகப்பனின் அன்புக் கடிதம்

## “என் பிள்ளையே.....

என்னை நீ அறிந்திருக்க மாட்டாய். ஆனால் உன்னைப் பற்றிய சகலத்தையும் நான் அறிந்திருக்கிறேன். உன் உட்காருதலையும் உன் எழுந்திருத்தலையும் நான் அறிந்திருக்கிறேன். உன் வழிகளெல்லாம் எனக்குத் தெரியும். உன் தலையில் உள்ள மயிர்களைக் கூட நான் எண்ணியிருக்கிறேன்! ஏனெனில், நீ என்னுடைய சாயலில் சிருஷ்டிக்கப் பட்டிருக்கிறாய். நீ எனக்குள் பிழைக்கிறாய், அசைகிறாய், இருக்கிறாய். ஏனெனில் நீ என்னுடைய சந்தானம்! நீ கர்பத்தில் உருவாகும் முன்னே உன்னை அறிந்திருக்கிறேன். இந்த உலகத்தை சிருஷ்டிப்பதற்கு முன்பே உன்னை தெரிந்து கொண்டேன். ஏதோ பிழையாக நீ உருவாகவில்லை. ஏனெனில், உன் நாட்களெல்லாம் என் புத்தகத்தில் எழுதியிருக்கிறது. உன் பிறப்பின் காலத்தையும், குடியிருப்பின் எல்லையையும் நான் முன்குறித்திருக்கிறேன். பிரமிக்கத்தக்க அதிசயமாய் நீ உண்டாக்கப்பட்டாய்! உன் தாயின் கர்பத்தில் நானே உன்னை உருவாக்கினேன். ஓர் நாளில் உன் தாயின் வயிற்றிலிருந்து எடுத்தேன்.

என்னை அறியாதவர்களால் நான் தவறாய் காட்டப்பட்டேன். நான் தூரமானவனும் கோபமுள்ளவனும் அல்ல. மாறாக அன்பின் முழு ரூபமும் நானே! உன்னிடம் முழுமையாய் அன்பு பாராட்டுவதே என் விருப்பம். ஏனெனில், நீ என் பிள்ளை! நான் உன் தகப்பன்! உன் உலகத் தகப்பன் தருவதைக் காட்டிலும் அதிக நன்மையானவைகளை நான் உனக்குத் தருகிறேன். ஏனெனில் நானே பூரண சற்குணமான தகப்பன். நீ பெறும் நன்மையான எந்த ஈவும் என் கரத்திலிருந்தே வருகிறது. நானே உனக்கு கொடுப்பவன். உன் தேவைகள் அனைத்தையும் தருவேன். உன் எதிர்காலத்திற்கு நான் வைத்திருக்கும் திட்டங்கள் முழுவதும் நம்பிக்கைக்குரியதே. ஏனெனில், அநாதி சிநேகத்தால் நான் உன்னை சிநேகிக்கிறேன். உன்னைக் குறித்து நான் கொண்டிருக்கும் சிந்தைகள் கடலின் மணலைப் பார்க்கிலும் அதிகம்! உன் மீது கொண்ட

மகிழ்ச்சியில் நான் களிகூர்ந்து பாடுகிறேன். உனக்கு நன்மை செய்வதிலிருந்து நான் ஒரு போதும் பின் வாங்க மாட்டேன். ஏனெனில் நீயே எனது பொக்கிஷம்! நிறைந்த சம்பத்தாய் இருக்கிறாய். உன்னை வாழ வைப்பதற்கு என் முழு ஆத்மாவோடும் நாடுகிறேன். பெரிதும் அதிசயமான காரியங்களை உனக்கு காட்ட நான் விரும்புகிறேன். உன் முழு இருதயத்தோடு என்னை தேடு. அப்போது என்னைக் கண்டடைவாய். என்னிடத்தில் மனமகிழ்ச்சியாய் இரு. நானே உன் இருதயத்தின் விருப்பங்களை அருளிச் செய்வேன். ஏனெனில், அந்த விருப்பங்களை நானே உனக்குத் தந்தேன். நீ நினைப்பதற்கும் மேலாய் அதிகமாய் கிரியை செய்திட நான் வல்லவராய் இருக்கிறேன். நானே உன் இருதயத்தை தேற்றுபவன். உன் சகல உபத்திரவங்களிலும் ஆறுதல் செய்யும் தகப்பனாகவே இருக்கிறேன். நீ நொறுங்குண்ட இருதயமாய் இருக்கும் போது உனக்கு சமீபமாய் இருக்கிறேன். ஒரு ஆட்டுக் குட்டியை, மேய்ப்பன் சுமப்பது போல என் இருதயத்திற்கு அருகில் உன்னை அணணத்து சுமக்கிறேன். உன் கண்ணீர் யாவையும் ஒரு நாளில் நான் துடைப்பேன். நீ பூமியில் அடைந்த சகல துயரத்தையும் ஒழித்துப் போடுவேன். நான் உன் தகப்பன். என் குமாரன் இயேசுவை நேசித்ததைப் போலவே உன்னையும் நேசிக்கிறேன். ஏனெனில், உன் மீது நான் கொண்ட அன்பு இயசுவிலிருந்துதான் முதலில் வெளிப்பட்டது. குமாரன் இயேசு என்னுடைய தன்மையின் ஸ்வருபமாகவே வந்தார். நான் உனக்கு விரோதமாய் அல்ல, உன் பட்சத்தில தான் இருக்கிறேன் என்பதை வெளிப்படுத்தவே குமாரன் வந்தார். உன் பாவங்களை விரல்விட்டா எண்ணிக் கொண்டிருக்கிறேன்? இல்லவே இல்லை! நானும் நீயும் ஒப்புறவாகிடத்தான் இயேசு மரித்தார். உன் மீது நான் கொண்ட அளவற்ற அன்பின் அடையாளமே அவரின் மரணம்! உன் நேசத்தை அடையும் படியே நான் நேசித்த அனைத்தையும் உனக்காக தந்துவிட்டேன். என் குமாரன் இயசுவை நீ பரிசாய் ஏற்றுக் கொண்டதால், என்னையே ஏற்றுக் கொண்டாய், என் நேசத்தை விட்டு உன்னை இனி எதுவும் மீண்டும் பிரித்திட முடியாது! உன் தகப்பன் வீட்டிற்கு வந்து விடு. பரலோகம் இதுவரை காணாத விருந்தை நான் உனக்குத் தருவேன். நான் எக்காலத்தும் உன் தகப்பனாய் இருக்கிறேன். இனியும் உன் தகப்பனாய் எக்காலத்தும் இருப்பேன். என் ஏக்கமான ஒரே கேள்வியெல்லாம் நீ என் பிள்ளையாய் இருப்பாயா? நான் உனக்காக காத்திருக்கிறேன். ”

மிகுந்த அன்புடன் உன் அப்பா,

சர்வவல்லமையுள்ள

**தேவன்!**